**IN THE COURT OF THE I ADDL.DIST. COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS P.W.2**

**Pro.O.P.No. 146 /2023**

| | |
|---|---|
| Name | : அமர்நாத் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.10.2025.

மனுதாரர் தரப்பில் சாட்சி ஆஜர். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக முதல் விசாரணை. எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அது ம.சா.2 ன் சாட்சியமாக பதிவு செய்யப்படுகிறது.

எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் உயில் டாக்டர்.மகேஸ்வரனால் எழுதி வைக்கப்பட்டது ஆகும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 உயிலில் என்னிடம் குறிப்பிட்டு காட்டப்படும் கையெழுத்து மகேஸ்வரனுடைய கையெழுத்து ஆகும். அது **ம.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ம.சா.ஆ.1 ல் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது ஆகும். 2 வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடைய சகோதரர் பிரேம்நாத் உடையது ஆகும். மதுரை, அண்ணாநகர், 784 மேற்கு மெயின் ரோடு என்ற விலாசத்தில் முதல் தளத்தில் இயங்கும் என்னுடைய அலுவலகத்தில் வைத்து மேற்படி கையெழுத்து போடப்பட்டது. மேற்படி உயிலில் டாக்டர் மகேஸ்வரன் என் முன்னிலையிலும், என்னுடைய அண்ணன் பிரேம்நாத் முன்னிலையிலும் கையெழுத்து போட்டார். அதை நாங்கள் பார்த்தோம். நானும், என் அண்ணனும் சாட்சி

கையெழுத்து போட்டதை டாக்டர் மகேஸ்வரன் பார்த்தார்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-அமர்நாத்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.10.28 18:07:04 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.